4. அமைச்சரின் விளக்க உரை

ஹவுஸ் ஸர்ஜன்கள் வேலே நிறுத்தம் குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி கல்வி-சுகாதார அமைச்சரின் விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலேவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 82-வது விதியின்கீழ் பேரவைக்கு ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலேவர் அவர்களே, நேற்று ஹவுஸ் ஸர்ஜன்களேப் பொறுத்து, அவர்களுடைய கோரிக்கைகளே வைத்து, நானும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தி சமரச முடிவுக்கு வந்தோம். அந்த வகையிலே கோரிக்கைகள் சிலவற்றை அவர்கள் எடுத்துவைத்து, சமரச முடிவின் அடிப்படையில் அவர்களும் ஒரு முடிவை மேற்கொண்டு தந்தார்கள். அதில் சில திருத்தங்கள் செய்து திருப்பித் தரப்பட்டது. மறுபடியும் வந்து அதில் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. மூன்றுவதாகக் கொண்டு வந்தார்கள். அதிலும் சில திருத்தங்கள் செய்து, அந்தத் திருத்தங்களின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்பட்டு, சிறிய திருத்தங்கள் 'வேர்ட்ஸ்' பொறுத்தவரை இருக்கின்றன. அதற்கு சரியான விளக்கம் வேண்டும் என்ற அளவில் இந்த அறிக்கையைப் பேரவையின் முன் நான் வைக்கிறேன்.

Mr. Speaker, Sir, Tamil Nadu House Surgeons and Students Association met the Honourable Chief Minister and the Honourable Health Minister on 7th September 1970 and have come to the following conclusions :—

An Expert Committee will be appointed within one week which will recommend how best the reduction of admission in Medical Colleges of this State can be effected which will be implemented by the Government. Expert members suggested by House Surgeons and Students Associations will also be considered for inclusion in the Committee. Two among them will be selected.

Fifty per cent of the available vacancies reserved for women in Family Planning Programme will be filled up by men within one week by those who have already applied and the rest as and when they apply. They will be replaced by women doctors as and when they are available.

In the 50 vacancies for Public Health Service, persons will be posted immediately, if they opt.

Chief Minister assured that there will not be any increase in the medical admission nor there will be any new medical colleges.

Non-medical M.Sc. course will be kept in abeyance.

As to the opening of Dental Clinics, Chief Minister assured that it will be included in the Part II scheme proposed this year.

The State Government will press for the revival of ECMFG examination in Madras.

As to the stipend for Senior House Surgeons and Post-Graduates it will be examined by Government later. Chief Minister assured to take effective measures to solve the unemployment problem of Doctors.

On the representation of the House-Surgeons that there should not be any victimisation of those who participated in this strike, it was agreed accordingly on the fulfilment of these demands, the House-Surgeons and Students Association promised to call off the strike and work will resume from Wednesday (9th September 1970) at 7 a.m.

இதை நான் கொடுப்பதற்குக் காரணம், ஹவுஸ் சர்ஜன்கள் தங்கள் ஸ்டேட்மெண்டில் ஹவுஸ் ஸர்ஜன்ஸி ஒன்பது மாதம் என்று கொடுத்திருக்கிருர்கள். அதுபற்றி முடிவு செய்யவேண்டியது இந்தியன் மெடிகல் கவுன்சில். அது ஒரு ஆண்டா அல்லது ஒன்பது மாதமா என்பதை அவர்கள்தான் முடிவு செய்யவேண்டும். அமைச்சரவர்களும், மாணவர்களும் தீர்மானிக்க முடியாது. அப்படிப்பட்ட நிலைமையை விளக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்த அறிக்கையைக் கொடுக்கிறேன்.

5. அறிவிப்புகள்.

(அ) தொழில்கள் வாரியத்திற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைக்கு ஓர் அறிவிப்பு. தொழில்கள் வாரியத்தின் தேர்தலுக்காக இருவருடைய பெயர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளன. முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய இடங்களின் எண்ணிக்கையை ஒத்திருப்பதால், அதாவது இரண்டு என்பதால், திரு. ஏ. எம். இராஜா, திரு. எஸ். ஆறுமுகம் ஆகிய இரு வேட்பாளர்களும் தொழில்கள் வாரியத்திற்கு முறைப்படி தேர்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

6. அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானமும், அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, நம்பிக்கையில்லாத் தீர்மானம், கண்டனத் தீர்மானம் இவற்றின் மீது விவாதம் தொடரும். இன்றைக்கு பேசுவதற்குக் கொடுத்திருப்பது 17 உறுப்பினர்களுடைய பெயர்கள். இருப்பது மூன்று மணிநேரம். ஆகவே, ஒவ்வொரு உறுப்பினரும் 10 நிமிஷம் பேசுவதற்கு எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: சபாநாயகர் அவர்களே, எங்கள் கட்சிக்காக ஒதுக்கியிருக்கும் நேரம் 40 நிமிஷங்கள். இதில் இத்தனை பேர் என்பதில்லாமல், எங்கள் கட்சிக்குள் நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம். ஆகவே, முதலில் பேசும் உறுப்பினருக்கு அதிக நேரம் வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.